www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2022

**12 - STD**

## கணக்குப்பதிவியல்

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 50

பகுதி - 1

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் 10 x 1 = 10

1. ₹8 செலுத்தப்பட்ட, ₹10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறு வெளியீட்டு விலை
   (அ) பங்கொன்று ₹10 (ஆ) பங்கொன்று ₹8
   (இ) பங்கொன்று ₹5 (ஈ) பங்கொன்று ₹2
2. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
   (அ) பணம் சாரா தகவல்கள் (ஆ) கடந்த கால தகவல்கள்
   (இ) குறுகிய கால தகவல்கள் (ஈ) நீண்ட கால தகவல்கள்
3. நிதிநிலைஅறிக்கைகள் பகுப்பாய்வின் பின்வரும் எந்த கருவி பல்வேறு ஆண்டுகளுக்கான விவரங்களை பகுப்பாய்வு செய்வதற்கு ஏற்புடையதாகும்?
   (அ) ரொக்க ஓட்ட பகுப்பாய்வு (ஆ) பொது அளவு அறிக்கை
   (இ) ஒப்பீட்டு அறிக்கை (ஈ) போக்கு ஆய்வு
4. முகமதிப்பைவிட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   (அ) பத்திர முனைமக் கணக்கு (ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு
   (இ) பங்கு முதல் கணக்கு (ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு
5. நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.
   அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்
   இ) முதலினக் காப்பு ஈ) காப்பு முதல்
6. ஒறுப்பிழப்புச் செய்த பங்குகளை மறுவெளியீடு செய்தபிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது
   (அ) பொதுக்காப்பு கணக்கிற்கு (ஆ) முதலினக்காப்பு கணக்கிற்கு
   (இ) பத்திர முனைமக் கணக்கிற்கு (ஈ) உபரி கணக்கிற்கு
7. நிதிநிலை அறிக்கை கருவிகள்
   (அ) ஒப்பீட்டு அறிக்கை (ஆ) போக்கு ஆய்வு
   (இ) பொது அளவு அறிக்கை (ஈ) இவை அனைத்தும்
8. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
   (அ) 175 (ஆ) 125 (இ) 25 (ஈ) 100
9. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது அல்ல?
   (அ) நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்விற்கும் பொருந்தும்.
   (ஆ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு ஒரு வழிமுறை, இது ஒரு முடிவல்ல.
   (இ) நிதி நிலை அறிக்கை பகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை.
   (ஈ) ஆய்வு செய்யப்பட்ட தகவல்களை உய்த்துணர்வது தனிப்பட்ட கருத்துகளைஉள்ளடக்கியதாகும்.
10. நிறுவனத்தில் ஏற்கனவே உள்ளபங்குதாரர்களுக்கு, முனைவு கடிதம் மூலம் பங்குகளை ஒதுக்கீடு செய்வது
    (அ) பொது வெளியீடு (ஆ) தனியார் ஒதுக்கு
    (இ) உரிமைவெளியீடு (ஈ) மேலுதிய பங்கு வெளியீடு



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

பகுதி - 2

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்
(வினா எண் 15 –க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) 4 x 2=8

11. பங்கு என்றால் என்ன?

12. அனிதா என்பவர் தஞ்சாவூர் மோட்டார் வரையறு நிறுவனத்தின் ₹10 மதிப்புள்ள 500 நேர்மைப் பங்குகளை வைத்துள்ளார். அவர் விண்ணப்பத்தின் மீது ₹3, ஒதுக்கீட்டின் மீது ₹5 செலுத்தி உள்ளார். ஆனால் முதல் மற்றும் இறுதி அழைப்புத் தொகையான ₹2 செலுத்தவில்லை. அழைப்புத் தொகையை செலுத்தத் தவறியதால் இயக்குநர்கள் அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்

13. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2015-16 ₹ | 2016-17 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50,000 | 60,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 40,000 | 50,000 |

14. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்

15. குமார் நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 மார்ச்31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையைதயார் செய்யவும்.

| விவரம் | 2017-18 (₹) |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| இதர வருமானம் | 20,000 |
| செலவுகள் | 3,00,000 |

16. பொது அளவு வருமான அறிக்கை தயாரிக்கும் வழிமுறைகளை விளக்கவும்.

பகுதி - 3

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்
(வினா எண் 20 –க்கு கட்டயமாக விடையளிக்கவும்) 4 x 3=12

17. நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினை விளக்கவும்.

18. சிறுகுறிப்பு வரைக.

(அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் (ஆ) காப்புமுதல்

19. பாரடைஸ் வரையறு நிறுவனம் ₹4,40,000 மதிப்புள்ள ~~வரையறு~~ சுகுணா நிறுவனத்திடமிருந்து வாங்கியது. இதற்குப்பதிலாக 10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை செலுத்தி நிறைவு செய்தனர். பின்வரும் சூழலுக்கான பதிவுகளைத்தரவும்.

அ) பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டால்

20. ஜெயம் டயர்ஸ் நிறுவனம் 15,000 சாதாரணப் பங்குகளை ₹10 வீதம் பின்வருமாறு செலுத்தும்படி வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீது ₹3 ஒதுக்கீட்டின் மீது ₹5 முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீது ₹2. அனைத்து தொகையும் பெறப்பட்டது. ஆனால் 100 பங்குகளை வைத்திருக்கும் ஒரு பங்குதாரர் அழைப்பு பணத்தை செலுத்தத் தவறினார். அழைப்பு நிலுவைக் கணக்கைப் பயன்படுத்தி அழைப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்

21. புராகிரஸ் வரையறு நிறுவனம் 50,000 சாதாரணப் பங்குகளை, பங்குகொன்று 10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது 2, ஒதுக்கீட்டின் போது 4, முதலாவது அழைப்பின் போது 2 மற்றும் இரண்டாவது அழைப்பின் போது 2 செலுத்தப்பட்ட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பட்டன மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும். (விண்ணப்பத்தின் போது)

22. மீனா நிறுமத்தின்2018, மார்ச்31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

தயாரிக்கவும்

| விவரம் | 2018, மார்ச்31 |
|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| பங்குதாரர் நிதி | 2,00,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 1,60,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 40,000 |
| மொத்தம் | 4,00,000 |
| II. சொத்துகள் | |
| நீண்டகாலச் சொத்துகள் | 3,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 1,00,000 |
| மொத்தம் | 4,00,000 |

## பகுதி - 4

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 4 x5=20

23. (அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு பாலை வரையறு நிறுமத்தின் போக்குப் பகுப்பாய்வினைக் கணக்கிடவும்.

இலட்சங்களில்

| விவரம் | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
|---|---|---|---|
| I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்குதாரர் நிதி | 250 | 275 | 300 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 100 | 125 | 100 |
| நடப்புப் பொறுப்புகள் | 50 | 40 | 80 |
| மொத்தம் | 400 | 440 | 480 |
| II. சொத்துகள் | | | |
| நிலைச் சொத்துகள் | 300 | 360 | 390 |
| நடப்புச் சொத்துகள் | 100 | 80 | 90 |

(அல்லது)

(ஆ) முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப்பங்குகளுக்குமுள்ள வேறுபாடுகளைகூறவும்

24. (அ) ராணி நிறுமத்தின்பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலைஅறிக்கையினைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016, மார்ச்31 | 2017, மார்ச்31 |
|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 5,40,000 | 6,00,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 2,70,000 | 2,50,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 90,000 | 1,50,000 |
| மொத்தம் | 9,00,000 | 10,00,000 |
| II. சொத்துகள் | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 7,20,000 | 8,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 1,80,000 | 2,00,000 |
| மொத்தம் | 9,00,000 | 10,00,000 |

(அல்லது)

(ஆ) தாய் நிறுவனம் ₹10 மதிப்புள்ள 1,00,000 நேர்மைப் பங்குகளை வெளியீடு செய்தது. விண்ணப்பத்தின்போது ₹5; ஒதுக்கீட்டின்போது ₹2 முதல் அழைப்பின்போது ₹2 மற்றும் இறுதி அழைப்பின்போது ₹1 செலுத்த வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு தொகை பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

25 (அ) மரியா மற்றும் கலா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2019, மார்ச்31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| விவரம் | மரியா நிறுவனம் | கலா நிறுவனம் |
|---|---|---|
| விற்பனைமூலம் பெற்ற வருவாய் | 1,00,000 | 2,00,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 70,000 | 1,20,000 |

(அல்லது)

(ஆ) விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுவனம், ஒன்று ₹10 வீதம் 20,000 பங்குகளை பங்கொன்றிற்கு
₹ 2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது.
₹ 2 விண்ணப்பத்தின் மீதும்
₹ 5 (முனைமம் உள்பட) ஒதுக்கீட்டின் மீதும்
₹ 5 முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீதும்
மிகை ஒப்பமாக30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குனர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப்பதிவினைத்தரவும்

26 (அ) கீர்த்திகா நிறுவனம் பங்கொன்று ₹10 வீதம் பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டது. தொகையானது விண்ணப்பத்தின் போது ₹ 2, ஒதுக்கீட்டின் போது ₹3 (முனைமம் உட்பட), முதல் அழைப்பின் போது ₹ 3 மற்றும் இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹3 எனச் செலுத்தப்படவேண்டும்.

பின்வரும் தருணங்களில் பங்குகளைஒறுப்பிழப்பு செய்வதற்கு தேவையான குறிப்பேட்டுப்பதிவுகளைத்தரவும்.

(i) 50 பங்குகளை வைத்திருக்கும் மோகன் என்பவர்இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத்தொகையை செலுத்தத் தவறியதால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

(ii) 50 பங்குகளை வைத்திருக்கும் மோகன் என்பவர்ஒதுக்கீட்டுத் தொகை, முதல் அழைப்பு, இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகை செலுத்தத்தவறியதால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

(iii) 50 பங்குகளை வைத்திருக்கும் மோகன் என்பவர்ஒதுக்கீட்டுத் தொகை மற்றும் முதல் அழைப்புத் தொகை செலுத்தத் தவறியதால் முதல் அழைப்பிற்கு பின் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்புச் செய்யப்பட்டன.

(ஆ) பின்வரும் மலர் நிறுமத்தின் 2016, மார்ச்31 மற்றும் 2017, மார்ச்31 ஆம் நாளைய ஒப்பீட்டு இருப்பு நிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016, மார்ச்31 | 2017, மார்ச்31 |
|---|---|---|
| **I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| 1. பங்குதாரர் நிதி | | |
| அ) பங்கு முதல் | 2,00,000 | 2,50,000 |
| ஆ) காப்பும் மிகுதியும் | 50,000 | 50,000 |
| 2. நீண்ட காலப் பொறுப்புகள் | | |
| நீண்ட காலக்கடன்கள் | 30,000 | 60,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் கணக்குகள் மூலம் | | |
| செலுத்த வேண்டியவைகள் | 20,000 | 60,000 |
| மொத்தம் | 3,00,000 | 4,20,000 |
| **II. சொத்துகள்** | | |
| 1. நீண்டகாலச் சொத்துகள் | | |
| 2. நடப்புச் சொத்துகள் | | |
| சரக்கிருப்பு | 75,000 | 1,50,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 75,000 | 45,000 |
| மொத்தம் | 3,00,000 | 4,20,000 |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593